1978 செப்டம்பர் 14]

பிரைமரி ஹெல்த் சென்டரும் இடிந்து விட்டது. புதிதாக வந்திருக்கும் இடம் மிகச் சிறிய கட்டிடமாக இருப்பதால் மூன்று டாக்டர்கள்கூட இருக்க முடியாது. இந்தச் சூழ்நிலையைக் கருதி உடனடியாக புதிய கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொழில் கூட்டுறவு வங்கி

*வினு எண். 205—திரு. வி. கே. கோதண்டராமன். மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) ரிசர்வ் வங்கி இதை அங்கீகரித்துள்ளதா?

(இ) இல்லை என்ருல், என்ன காரணம்?

(ஈ) இதுவரை எவ்வளவு கடன் வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி 1961-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) ரிசர்வ் வங்கி இதனை அங்கீகரிக்கவில்லை.

(இ) ரிசர்வ் வங்கி இதனை அங்கீகரிக்க சில நிபந்தனைகளை விதித்துள்ளது. இது குறித்து ரிசர்வ் வங்கிக்கும், தமிழக அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

(ஈ) 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி வரை தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி, குறுகிய மற்றும் நீண்ட கால கடன்களாக, மொத்தமாக ரூ.1,701.30 இலட்சம் வழங்கியுள்ளது.

உளுந்தூர்பேட்டையில் விமானதளம்.

*வினு எண். 206—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னுற்காடு மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் உள்ள பழைய விமானதளத்தை சீர் செய்து விமான போக்குவரத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உளுந்தூர்ப் பேட்டையில் உள்ள பழைய விமான தளத்தைப் புதுப்பித்தால் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் நெய்வேலி, பாண்டிச்சேரி போன்ற இடங்களைச் சுற்றிப் பார்க்க வசதி ஏற்படும். எனவே அது புதுப்பிக்கப் படுமா? அதோடு அந்த இடம் தற்பொழுது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது? யாருடைய பொறுப்பில் அது இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அந்த விமான தளத்தைப் புதுப்பிக்கின்ற எண்ணம் அரசுக்குத் தற்போது இல்லை. இது மத்திய அரசினுடைய பொறுப்பிலே இருந்து வருகிறது. இந்த விமானதள இடத்தை அரிசன மற்றும் மலைசாதி வகுப்பினருக்கு வீடு கட்ட எடுத்துக்கொள்ளலாமா என்பது பற்றியும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

வேலூர்—நாகர்கோயில் விரைவுப் பேருந்து.

*வினு எண். 207—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு மே மாதத்தில் வேலூரிலிருந்து நாகர்கோவில் செல்லும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த துரித வண்டி, திருவண்ணாமலைக்கு அருகில் விபத்துக்குள்ளாகியதா?

(ஆ) ஆம் எனில், அதனுல் பொதுமக்களுக்கும் அவர்களுடைய உடமைகளுக்கும் சேதாரம் உண்டா?

(இ) சேதாரத்திற்கு நட்ட ஈடு தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம். 8—5—1978 அன்று திருவண்ணாமலையில் அந்த விபத்து நடந்தது.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.